# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 6221 / 2010 / எம்சி. 8 நாள் : 23.7.2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 30.07.2010 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம்
## ஜுலை 2010

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | கல்விப் பிரிவு - மாநகராட்சி ஆரம்பப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு இலவச காலணிகள் மற்றும் காலுறைகள் வழங்குதல் - அரசு ஆணை பெறப்பட்டது – பதிவு செய்தல் - தொடர்பாக |
| 2 | தெற்கு மண்டலம் - அனுப்பர்பாளையம் கிராமம் - நகரளவை எண் 936சி – ரேஸ்கோர்ஸ் பகுதி – தனியார் பாதை என அரசாணை வெளியிடப்பட்டது – மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் - தொடர்பாக |
| 3 | நகரமைப்புப் பிரிவு - கட்டிட வரைபட திட்ட அனுமதி வழுங்குதல் - நகர் ஊரமைப்பு இயக்குநரின் செயல்முறை ஆணை – மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 34 – மேட்டுப்பாளையம் சாலை-அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் எதிரில் நடைபாதை மேம்பாலம் அமைத்தல் பணி – தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல் - விருப்ப கேட்பு அறிக்கை கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - 2010-11ம் ஆண்டிற்கான தரப்படுத்தப்பட்ட விலைவிபர அட்டவணை – மாமன்றம் பதிவு செய்தல் -தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - திருச்சி சாலையில் சங்கனூர் பள்ளம் முதல் சுங்கம் வரை சாலையின் மையத்தில் கம்பத்துடன் கூடிய 2x250 சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - மாநகராட்சி பகுதியில் 14 போக்குவரத்து குடை அமைத்தல் பணி – மாமன்ற பின்னேற்பு கோருதல் - அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - உயர் படிப்பக மற்றும் வாழ்க்கை வழிகாட்டி மையம் – கோவை அரசு கலைக் கல்லூரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 9 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 2 – சுகாதார பணியாளருக்கான அடுக்குமாடி குடியிருப்பு கட்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 10 | பொறியியல் பிரிவு - உக்கடம்-சுங்கம் பைபாஸ் சாலை – சுரங்க நடைபாதை அமைத்தல் பணி – மதிப்பீடு ரூ.3.60 கோடி - நிர்வாக அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - நான்கு மண்டலங்களிலும் உள்ள பேருந்து நிலையங்களை பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் பராமரித்தல் மற்றும் இயக்குதல் - திட்ட அறிக்கை தயாரித்தல் - ஆலோசகர்களை நியமனம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | நகரமைப்புப் பிரிவு - நிலஅளவை பணியாளர்கள் - பணி நீட்டிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 13 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர். மார்க்கெட் கடை எண் 59,64,66- ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 14 | மேற்கு மண்டலம் - சொக்கம்புதூரில் உள்ள சலவைத்துறை தமிழ்நாடு சலவையாளர் சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டது – கால நீட்டிப்பு வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | பணியமைப்பு - திருமதி.என். தனலட்சுமி, இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர், தெற்கு மண்டலம் - சென்னை மாநகராட்சிக்கு மாறுதல் கோரியது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |

| | |
|---|---|
| 16 | கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூா் பேருந்து நிலையம் - விஜயா பதிப்பகத்திற்கு புத்தக கடை வைக்க கடை ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| 17 | பொறியியல் பிரிவு - அவிநாசி சாலையில் உள்ள 20 பேருந்து நிழற்குடைகள், 20 சிறுநீா் கழிப்பிடங்கள் மற்றும் 60 நடமாடும் கழிப்பறைகள் பராமரித்தல் பணி – விருப்ப கேட்பு அறிக்கை கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| 18 | பணியமைப்பு-திருமதி.N.அன்னாள்மேரி, பலநோக்கு சுகாதார செவிலியா், ஜெயில் ரோடு, நகா்நல மையம் - சென்னை மாநகராட்சிக்கு பணி மாறுதல் கோரியது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| 19 | JNNURM - பில்லூா் குடிநீா் திட்டம் பகுதி1 - கணபதி முதல் சிங்காநல்லூா் வரை பிரதான குழாய் மாற்றி அமைத்தல் பணி - திருத்தப்பட்ட மதிப்பீடு – பங்கு தொகை செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக. |
| 20 | JNNURM - பில்லூா் 2 குடிநீா் திட்டம் - வீரபாண்டி பிரிவு ரயில்வே இருப்புப் பாதை வளைவு எண்.6 - இருப்புப் பாதையின் கீழ் குழாய் பதித்தல் பணி – மதிப்பீடு - ரூ.99.50 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக. |
| 21 | JNNURM - பில்லூா் 2 குடிநீா் திட்டம் - வீரபாண்டி பிரிவு ரயில்வே இருப்புப் பாதை வளைவு எண்.6 - இருப்புப் பாதையின் கீழ் ஏா் வால்வுகள் மற்றும் சுவிஸ் வால்வுகள் பொருத்துதல் பணி – மதிப்பீடு - ரூ.33.80 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக. |
| 22 | JNNURM - பில்லூா் 2 குடிநீா் திட்டம் - கீரணத்தம் ஊராட்சி சத்தியமங்கலம் - மைசூா் செல்லும் தேசிய நெடுஞ்சாலையின்கீழ் குழாய் பதித்தல் பணி – மதிப்பீடு - ரூ.58 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக. |
| 23 | தெற்கு மண்டலம் - உக்கடம் பேருந்து நிலையம் - திரு.முகமது சலீம் என்பவருக்கு ஆவின் பாலக பெட்டி அமைக்க இடம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக. |
| 24 | பொறிறியல் பிரிவு - நகா்புர ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் (BSUP) மேற்கொள்ளுதல் - பாதாள சாக்கடை மற்றும் குடிநீா் வீட்டிணைப்புகள் வழங்குதல் - பயனாளிகளிடமிருந்து வைப்புத் தொகை வசூலிக்கப்படுவதிலிருந்து விலக்களித்தல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடா்பு |

நன்றியுரை

இணைப்பு - 3

அ) **திருக்குறள்**

**எவ்வ துறைவ துலக முலகத்தோ**
**டவ்வ துறைவ தறிவு.**

**(குறள் 426)**

**விளக்கம்**

**உயர்ந்தோர் வழியில் உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ அதற்கேற்ப நடந்து கொள்வதே அறிவாகும்.**

**திருவள்ளுவர்.**

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

பொருள்: கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி - ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 ஜோடி காலணிகள் (Canvas Shoes) மற்றும் 2 ஜோடி காலுறைகள் (Socks) - மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க அனுமதி கோரியது - அரசு அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - சார்பாக.

பார்வை: 1. மாமன்ற தீர்மானம் எண்.67, நாள்.11.09.09.
2. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.5207/08/கே 6, நாள்.06.03.2010.
3. அரசாணை (ப) எண்.236, ந.நி.ம.கு.வ(மாந2) துறை, நாள்.17.05.2010.

----

கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் செயல்படும் 45 ஆரம்பப்பள்ளிகள் மற்றும் 12 நடுநிலைப்பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 ஜோடி காலணிகள் (Canvas Shoes) மற்றும் 2 ஜோடி காலுறைகள் (Socks) மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கவும், அரசின் அனுமதி பெற்று வழங்கவும் பார்வையில் காண் மாமன்ற தீர்மானத்தின்படி தீர்மானிக்கப்பட்டது.

பார்வை 1-ல் காண் மாமன்ற தீர்மானத்தின்படி மாநகராட்சி ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 ஜோடி காலணிகள் (Canvas Shoes) மற்றும் 2 ஜோடி காலுறைகள் வாங்கி வழங்க ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள பார்வை 2-ல் காண் இவ்வலுவலக கடிதத்தின்படி அரசு அனுமதி கோரப்பட்டது.

பார்வை 3-ல் காண் அரசு ஆணை (ப) எண்.236, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள்.17.05.2010ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியில் வரும் கல்வி ஆண்டில் ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 ஜோடி காலணிகள் (Canvas Shoes) மற்றும் 2 ஜோடி காலுறைகள் (Socks) கோயம்புத்தூர் மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

பார்வை 3-ல் காண் அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1) அரசு ஆணையினை மாமன்றம் பதிவு செய்யலாம்.
2) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், பொது நிதியிலிருந்து செலவினத்தை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 5207/2009/கே.6

### மாநகர மன்ற தீர்மானம் எண் 59 நாள் 30.07.10

1. அரசு ஆணை (ப) எண். 236 ந.நி.ம.கு.வ.(மாந2) துறை நாள் 17.05.2010 பதிவு செய்யப்பட்டது.
2. அலுவலகக் குறிப்பு 2 ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி அனுப்பர்பாளையம் கிராமம் நகரளவை எண். 936-சி ரேஸ்கோர்ஸ் பகுதியில் அமைந்துள்ள 20’ அகலமுள்ள தனியாருக்கு சொந்தமான பொது பாதை மாநகர மன்ற தீர்மானம் எண். 580 நாள் 12.08.1986 ன்படி பொது பாதை அறிவிக்கப்பட்டதை எதிர்த்து திருமதி கனகம் மற்றும் 7 நபர்கள் ஆணையாளர் கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் ஐவரும் மீதும் ரிட் மனு எண். 18222/94 நாள் 20.05.2005 தீர்ப்புரையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்படி மன்ற தீர்மானத்தை ரத்து செய்யக்கோரி தொடரப்பட்ட ரிட் அப்பில் மேல் முறையீடு மனு எண் 2042/2005 தீர்ப்புரை நாள். 01.02.2008 அடிப்படையில் அரசாணை எண். (டி) நெ. 285 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (எம்.எ1) நாள் 07.06.2010ல் மேற்படி பாதை தனியார் பாதை என விளம்புகை செய்து அரசாணை வெளியிடப்பட்டது. மேற்படி அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அரசாணையை பதிவு செய்யலாம். ந.க.எண். 18228/94/சி 10/சி 2 தெ

### மாநகர மன்ற தீர்மானம் எண் 60 நாள் 30.07.10

அரசு ஆணை (டி) நெ. 285 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (எம்.எ1) துறை நாள் 7.6.10 பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள் . கோயம்புத்தூர் மாநகராட்சியில் - நடைமுறையில் உள்ள கட்டிட வரைபட திட்ட அனுமதி குறித்து, நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை. அவர்களால் கூடுதல் அதிகாரம் வழங்கியுள்ளது – குறித்து.

---------------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கட்டிட வரைபட திட்ட அனுமதியானது கீழ் குறித்தவாறு உள்ளது.

| வரிசை எண் | கட்டிட பயன்பாடு | மொத்த தளங்கள் | குடியிருப்பு எண்ணிக்கை | மொத்த தளபரப்பு | கட்டிட வகைப்பாடு |
|---|---|---|---|---|---|
| 1 | குடியிருப்பு | தரைதளம் + முதல் தளம் | 1 | 200 சதுர.மீ | தனித்த கட்டிடம் |
| 2 | வணிக கட்டிடம் | தரைதளம் + முதல் தளம் | - | 100. சதுர.மீ | தனித்த கட்டிடம் |

மேற்குறித்த திட்ட அனுமதிக்கான அதிகாரமானது சென்னை நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 9862/10/பி.எ1. நாள். 14.06.2010-ன் மூலம் கூடுதல் அதிகாரம் கீழ் குறிததுள்ளவாறு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | கட்டிட பயன்பாடு | மொத்த தளங்கள் | குடியிருப்பு எண்ணிக்கை | மொத்த தளபரப்பு | கட்டிட வகைப்பாடு |
|---|---|---|---|---|---|
| 1 | குடியிருப்பு | தரைதளம் + இரண்டு தளங்கள் | நான்கு | 4000 சதுரடி | தனித்த கட்டிடம் |
| 2 | வணிக கட்டிடம் | தரைதளம் + முதல்தளம் | — | 2000 சதுரடி | தனித்த கட்டிடம் |

மற்றும் உள்ளாட்சிகளுக்கு திட்ட அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி, மனை ஒப்புதலுடன் (Site apporval) உரிய நிபந்தனைகளை நிறைவு செய்த பின்னர் வழங்கவும் உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான அபிவிருத்தி கட்டணம், நன்னிலைவரி - ரூ. 300/- ஆகியவற்றுடன், உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி கட்டணம் கீழகண்டவாறு வசூல் செய்து மாவட்ட கருவூலத்தில் செலுத்தவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

| பலமாடி கட்டிடம் இல்லாத மற்ற கட்டிடங்கள் | செங்கல்பட்டு மண்டலம் 1. ச.மீ ரூ. | கோவை, திருப்பூர் குறிச்சி. 1.ச.மீ ரூ. | பிறபகுதி 1. ச.மீ ரூ. |
|---|---|---|---|
| வணிககட்டிடம், தகவல்தொழில் நுட்ப கட்டிடம், தொகுப்பு கட்டிடம், மற்றும் சிறப்பு கட்டிடம் | 250 | 190 | 125 |
| நிறுவன கட்டிடம் (Institution Buliding ) | 100 | 75 | 50 |
| தொழில் கட்டிடம் (Industrial Building ) | 150 | 112.50 | 75 |

மேலும் இவ்வதிகார பகிர்வு 01.06.2010 முதல் அமுலுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். 5945/2010/எம்.எச்5.

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 61 நாள் 30.07.10</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 34-ல் மேட்டுப்பாளையம் சாலையில் அவினாசிலிங்கம் பல்கலைக் கழகம் எதிரில் பொதுமக்கள் தினசரி சாலையை கடக்கும்பொழுது போக்குவரத்திற்கு மிகவும் இடையூறு மற்றும் விபத்துக்கள் ஏற்படுகிறது.

எனவே இந்நெடுஞ்சாலையை இடையூறின்றி கடப்பதற்கு ஏதுவாக நடைபாதை மேம்பாலம் அமைப்பது அவசியமாகிறது. இப்பணிக்கு மாமன்றம் தனது நடப்பு நிதியாண்டு வரவு, செலவு திட்டத்தில் பணி மேற்கொள்ள அறிவித்துள்ளது.

எனவே மேட்டுப்பாளையம் சாலையில் அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் எதிர்புறம் ஒரு நடைபாதை மேம்பாலம் ரூ. 75.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் (PPP Mode) நிறுவி 15 ஆண்டுகளுக்கு பராமரிப்பு செய்து, பிறகு மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யும் பணியினை மேற்கொள்ளவும், இப்பணிக்கான விருப்பக் கேட்பு அறிக்கை கோரவும் (Expression of Interest) அனுமதி வேண்டி பொருள் மாமன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 6898/2010/எம்.டி.4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 62 நாள் 30.07.10</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் திருச்சி சாலையில் அரசு மருத்துவமனை முன்புறம் மற்றும் இராமநாதபுரம் சந்திப்பு ஆகிய இடங்களிலும், அவினாசி சாலையில் ஹோப் காலேஜ் பகுதியிலும் பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு (PPP mode) முறையில் பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு நடைபாதை மேம்பாலம் அமைக்க அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

கோவை மாநகராட்சி பொறியியல் பிரிவில் கட்டிட கட்டுமானம், மராமத்து பணிகள் போன்றவற்றிற்கு விலை விபர அட்டவணை தயாரிக்க தமிழ்நாடு பொதுப்பணித்துறை முதன்மைப் பொறியாளர், சென்னை அவர்களின் அனுமதி எண் HDO/64500/2010/Dated 06-04-2010-ல் அனுமதி வழங்கப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டுள்ளது. 2010-2011ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை 01-04-2010 முதல் நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று தமிழ்நாடு நெடுஞ்சாலை துறையின் மூலம் சாலைப் பணிகளுக்கும் 2010-2011-ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை நெடுஞ்சாலை துறை உத்திரவு எண்.3999/CONTRACT-1/2010 Dated 26-04-2010-ன் படி அனுமதிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டுள்ளது. இவ்விலை விபர அட்டவணை 01-04-2010 முதல் நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட 2010-2011-ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையை இம்மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த பெறப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையை மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பதிவு செய்யலாம் ந.க.எண். 6458 /2010/TA(MD4)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 63 நாள் 30.07.10</u>

அலுவலகக் குறிப்பு பதிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 28.06.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்ட பணியை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பேயர் | மதிப்பீட்டுத் தோகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4927/10/ எம்.டி.3 | திருச்சி சாலையில் சங்கனூர் பள்ளம் முதல் சுங்கம் வரை சாலையின் மையத்தில் கம்பத்துடன் கூடிய 2x250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 75.00 | 14-06-10 | தி/எ்.சபரி எலக்ட்ரிக்கல்ஸ் | 4.98% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண் 4927/10/எம்.டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 64 நாள் 30.07.10**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்ட பணிக்கு நமக்கு நாமே திட்டத்தின்மூலம் மேற்க்கொள்ளப்படுவதால் நிர்வாக அனுமதி நாள் 25.05.2010-ல் மாவட்ட ஆட்சியாளர் அவர்களால் வழங்கப்பட்டு 12.06.2010 அன்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 17.06.2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்ட ஒப்பந்ததாரருக்கு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பேயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4246/10/ எம்.டி.4 | கோயம்புத்துார் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 14 போக்குவரத்து குடை அமைத்தல் | 41,49,992 | 12.06.10 முதல் அழைப்பு | ஸ்ரீ வத்ஸா ஸ்டெயின்லஸ் ஸ்டீல்ஸ் பேப்ரிக்கேட்டர்ஸ் (பி) லிமிடெட் | 4.91% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி 14.06.2010 அன்று பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி அறிவிப்பு 14.06.2010 அன்று வழங்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி பின்னேற்பு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு வரிசை எண் 1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிக்கு பொறியியல் விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 4246/10/எம்.டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 65 நாள் 30.07.10**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட டாக்டர் நஞ்சப்பா ரோட்டில் உயர் படிப்பக மற்றும் வாழ்க்கை வழிகாட்டி மையம் ரூ. 39.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்த மையத்தில் மாணவர்களுக்கு தேவையான கணினி வசதிகள், நூலக வசதிகள் உள்பட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகள் மற்றும் மாநகர பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் தங்களது வாழ்க்கை முன்னேற்றத்திற்கு இம்மையத்தில் உள்ள வசதிகளை பயன்படுத்திக் கொள்ளும் வண்ணம் இம்மையத்தில் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கோவை அரசு கலைக் கல்லூரி பேராசிரியர்களைக் கொண்டு இம்மையத்தை நடத்தவும், பராமரிக்கவும் அரசு கலைக் கல்லூரி முதல்வருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அரசு கலைக் கல்லூரி முதல்வர், தமது 05.07.10 ம் தேதியிட்ட கடிதத்தில், அரசு கலைக் கல்லூரி பேராசிரியர்களைக் கொண்டு இம்மையத்தை நடத்துவதற்கு இசைவு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கோவை அரசு கலைக் கல்லூரி மற்றும் கோவை மாநகராட்சி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

எனவே இம்மையத்தை கோவை அரசு கலைக் கல்லூரி பேராசிரியர்களைக்கொண்டு நடத்துவதற்கும், பராமரிப்பதற்கும் அனுமதியும், மாநகராட்சிக்கும், கோவை அரசு கலைக் கல்லூரிக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு மாமன்ற ஒப்புதல் வேண்டியும் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண். 6667/10/எம்.டி.4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 66 நாள் 30.07.10</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் வார்டு எண் 2-க்குட்பட்ட பயனீர் மில் சாலையில் உள்ள பழுதடைந்த சுகாதார பணியாளர் குடியிருப்புகளை இடித்துவிட்டு புதியதாக அடுக்குமாடி குடியிருப்புகள் 6 பிளாக்குகள், ஒரு பிளாக்கிற்க்கு 8 வீடுகள் வீதம் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய 48 குடியிருப்புகள் கட்ட ரூ.300 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் தமது கடிதம் ந.க.எண். 39618/2009/LA.3. தேதி 09.11.2009-ம் தேதிய கடிதத்தில் மாநகராட்சி பகுதியில் சுகாதார பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்ட நிதி உதவி உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி 2009-2010-ல் செய்யப்படும் அதற்கான முன்மொழிவுகளை குழுவிற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

அதன்படி வார்டு எண் 2-ல் பயனீர் மில் சாலையில் உள்ள சுகாதார பணியாளர்கள் குடியிருப்பு தற்போது ஓட்டு கூரையுடன் கூடியயதும், மிகவும் பழுதடைந்து உள்ளதால் இக்குடியிருப்பை இடித்து விட்டு புதியதாக அடுக்குமாடி குடியிருப்பு வடிவமைப்பில் 48 வீடுகள் தரை மற்றும் மூன்று தளங்கள் (ஒரு பிளாக்கு 8 வீடு வீதம் 6 பிளாக்குகள்) ரூ.300 லட்சத்திற்கு 12.11.2009-ம் தேதி இவ்வலுவலக கடிதம் எண் 16056/2008/எம்டி2.யில் முன்மொழிவு ஆணையாளர் அவர்களால் அனுப்பப்பட்டது.

நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் தமது கடிதம் ந.க.எண்.39618/ 2009/ LA.3. தேதி 29.01.2010-ம் தேதிய கடிதத்தில் 18.01.2010-ம் தேதி உள்கட்டமைப்பு இடைவேளி நிரப்பு நிதி 2009-2010 குழு கூட்டத்தில் பயனீர் மில் சாலையில் சுகாதார பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்க மதிப்பீடு ரூ.300 லட்சத்தில் ரூ.150 லட்சம் மானியமாக ஒதுக்கீடு செய்யப்படுள்ளதாக தெரிவித்து உள்ளார்.

மேற்கண்ட பயனீர் மில் சாலையில் உள்ள சுகாதார பணியாளர்களுக்கு பழுதடைந்த குடியிருப்புகளை இடித்துவிட்டு பதியதாக அடுக்குமாடி குடியிருப்புகள் 6 பிளாக்குகள் (ஒரு பிளாக்கிற்க்கு 8 வீடுகள் வீதம்) 48 குடியிருப்புகள் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் ரூ.150 லட்சமும், மாநகராட்சி போது நிதி ரூ.150 லட்சமும் சேர்த்து மதிப்பீடு ரூ.300 லட்சத்தில் மேற்கொள்ளவும், நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் நிர்வாக அனுமதி பெறவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி ரூ.150 லட்சமும் மாநகராட்சி பொது நிதி ரூ.150 லட்சமும் சேர்த்து மதிப்பீடு ரூ.300 லட்சத்திற்கு சுகாதார பணியாளர் அடுக்குமாடி குடியிருப்பு பயனீர் மில் சாலையில் கட்ட அனுமதிக்கலாம். நிர்வாக அனுமதிக்கு பரிந்துரை செய்யலாம்.

ந.க.எண் 16056/ 08/ எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 67 நாள் 30.07.10**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் உக்கடம் - சுங்கம் பைபாஸ் சாலை வழியாக அதிகப்படியான பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் சாலையினை கடந்துவருவது சிரமமாக உள்ள காரணத்தால் சாலையின் குறுக்கே சுரங்க நடைபாதை மற்றும் அணுகுசாலை அமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது.

மேற்படி அதிகப்படியாக பொதுமக்கள் சாலையினை கடப்பதற்கு உதவியாக சுரங்க நடைபாதை மற்றும் அணுகுசாலை அமைக்க மதிப்பீடு ரூ. 3.60 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே மதிப்பீட்டுத் தொகைக்கான ரூ. 3.60 கோடிக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குனருக்கு பரிந்துரைக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பரிந்துரை செய்யலாம். ந.க.எண். 6542/10/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 68 நாள் 30.07.10**

அலுவலகக் குறிப்பினை ஏற்று நகராட்சி நிர்வாக இயக்குனருக்கு பரிந்துரை செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

கோவை மாநகராட்சி நான்கு மண்டலங்களிலும் தற்போது பேருந்து நிலையம் மற்றும் ஆம்னி பேருந்து நிலையம் உள்ளது. இவற்றை பராமரிக்க மாநகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கூடுதலாக சுகாதார முறையில் பராமரிக்க கீழ்க்கண்ட பேருந்து நிலையங்களை இயக்கவும் மற்றும் பராமரிக்கவும் அத்தியாவசியமாகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மத்திய பேருந்து நிலையம், காந்திபுரம் (தெற்கு மண்டலம்) | - | A வகுப்பு |
| 2. | நகர பேருந்து நிலையம், காந்திபுரம் (தெற்கு மண்டலம்) | - | A வகுப்பு |
| 3. | உக்கடம் பேருந்து நிலையம் (தெற்கு மண்டலம்) | - | A வகுப்பு |
| 4. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் (கிழக்கு மண்டலம்) | - | A வகுப்பு |
| 5. | ஆம்னி பேருந்து நிலையம் (வடக்கு மண்டலம்) | - | --- |

மேற்கண்ட பேருந்து நிலையங்களை பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் (Public Private Partnership Basis) பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணியினை மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) சாத்தியக் கூறு அறிக்கை (Feasibility Report), ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் அனுகூல ஒப்பந்தப் படிவங்கள் (Concession Agreement) ஆகியவற்றினை தயாரிக்கும் பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் மூலமாக ஆலோசகர்களை நியமனம் செய்ய கேட்டுக் கொள்ளவும், இதற்கான செலவினத்தை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 7526/2010/MD3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 69 நாள் 30.07.10**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

கோயம்புத்தூா் மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் தற்பொழுது பணிபுரிந்து வரும் நிலஅளவை பிரிவு பணியாளா்களுக்கு இரண்டு மற்றும் மூன்றாம் ஆண்டிற்கான அயற்பணி நீட்சி பிரேரனை வழங்க உதவி இயக்குநா், மாவட்ட நில அளவை அலுவலகம், கோவை அவா்கள் கடிதம் எண் அ 1/5565/09 நாள் 19.04.2010-ன் மூலம் கோரப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் தற்பொழுது மாநகராட்சி மண்டல அலுவலகங்களில் பணிபுரியும் 1) திரு. டி. தேவராஜ், சாா் ஆய்வாளா், மேற்கு மண்டலம் மற்றும் புல உதவியாளா்களான 2) திரு. ஏ. ஏசுபாதம் (வடக்கு மண்டலம்) 3) திரு பி. சுப்ரமணியன் (கிழக்கு மண்டலம்) 4) திரு எஸ். செல்வநாயகம் (கிழக்கு மண்டலம்) 5) திரு எஸ். விஸ்வநாதன் (மேற்கு மண்டலம்) 6) திரு என். ராஜேந்திரன் (வடக்கு மண்டலம்) ஆகிய ஆறு பணியாளா்களுக்கு இரண்டாம் ஆண்டிற்கான பணி நீட்சியும் மேலும் 7) திரு எஸ். நடராஜன், சாா் ஆய்வாளா் ( வடக்கு மண்டலம்) மற்றும் புல உதவியாளா்கள் 8) திரு வி.என். ரெங்கசாமி (தெற்கு மண்டலம்) 9) திரு ஆா். செல்வராஜ் (தெற்கு மண்டலம்) 10) திரு ஆா். ரவி (மேற்கு மண்டலம்) ஆகிய வரிசை எண். 7 முதல் 10 வரையிலான நான்கு பணியாளா்களுக்கு மூன்றாம் ஆண்டிற்கான பணி நீட்சியும் செய்ய உதவி இயக்குநா், மாவட்ட நில அளவை அலுவலகம், கோவை அவா்களுக்கு ஒப்புதல் கடிதம் வழங்குவது குறித்து மாமன்ற ஒப்புதல் வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 11242/2009/எம்.எச் 5

**மாநகர மன்ற தீா்மானம் எண் 70 நாள் 30.07.10**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள்: கோவை மாநகராட்சி தியாகி குமரன் மாா்க்கெட்டிலுள்ள – மொத்த காய்கறி மாா்க்கெட் - மேட்டுப்பாளையம் சாலைக்கு ஏற்கனவே மாற்றம் செய்யப்பட்டது – மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆா் மாா்க்கெட் கடை எண். 59-ஐ திரு.அப்துல் கலாம் என்பவருக்கும் கடை எண்.64-ஐ திரு. அப்துல் ஹக்கீம் என்பவருக்கும் மற்றும் கடை எண்.66-ஐ திரு. முகமது இலியாஸ் என்பவருக்கும் ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது –தொடா்பாக.

-------------

கோவை மாநகராட்சிக்குட்பட்ட தியாகி குமரன் மாா்க்கெட்டில் உள்ள மொத்த காய்கறி மாா்க்கெட்டானது மேட்டுப்பாளையம் சாலைக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டு ஏற்கனவே வியாபாரம் செய்து வந்த வியாபாரிகளது பட்டியல் தயாா் செய்யப்பட்டது. (மாமன்ற தீா்மானம் 19 தேதி 4.4.94)

முதற்கட்டமாக 60 கடைகள் கட்டி 60 வியாபாரிகளுக்கு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது. (மாமன்ற தீா்மான எண்.1919 தேதி 20.06.94)

மீண்டும் 18 கடைகள் கட்டப்பட்டு எஞ்சிய 18 வியாபாரிகளுக்கு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது. (மாமன்ற தீா்மான எண்.3245 தேதி 13.1.96). இதில் 10 நபா்கள் மட்டுமே கடைகளின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டனா். எஞ்சியவா்கள் (திரு. முருகன், PVR பாலன் உட்பட) 9 நபா்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடைகளின் பொறுப்பினை ஏற்க காலம் தாழ்த்தி வந்தனா்.

இந்நிலையில் பழைய வியாபாரிகளுக்கு முன்னுரிமை கொடுத்து கடைகளை ஒதுக்கீடு செய்யும் முறையினை ரத்து செய்து G.O.No. 85, MAWS எண்ணிட்ட தேதி 19.07.2000-ல் அரசு ஆணை வெளியிடப்பட்டது. இதனால் இதுவரை காலம் தாழ்த்தி வந்த வியாபாரிகள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடைகளின் பொறுப்பினை ஏற்க மாநகராட்சியினை அணுகினா். இருப்பினும் இவா்களுக்கு கடைகளை ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டு அதன் மீது அரசின் தெளிவுரை கோர மாமன்ற தீா்மான எண்.420 தேதி 28.03.02-ன்படி முடிவு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டது.

இதன்மீது (CMA அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட தெளிவுரை கடிதம் 42522/02/MCB) தேதி 5.11.04-ல் மேற்படி கடைகளை அரசாணை 85-ன் அடிப்படையில் பொது ஏலத்தில் விடுமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி 9 கடைகளை கடந்த 30.06.2005-ம் தேதியன்று மாநகராட்சியானது பொது ஏலத்திற்கு கொண்டு வந்தது.

மேற்படி 9 கடைகள் பொது ஏலத்தின் மூலம் ஒப்படைப்பு செய்யப்படுவதை எதிா்த்து W.P.எண்கள் 24052/05 மற்றும் 24053/05 ஆகியவற்றின்படி திரு.PVR பாலன் மற்றும் திரு.தங்கமணி ஆகியோா் சென்னை உயா்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடா்ந்து அதில் W.P.M.P. எண்கள் 26223/05 மற்றும் 26225/05 ஆகியவற்றின்படி மாநகராட்சியின் பொது ஏலத்திற்கு எதிராக தடை உத்திரவுகளும் பெற்றனா். இதனால் மேற்படி கடைகளை மாநகராட்சியால் பொது ஏலம் மூலம் ஒப்படைப்பு செய்ய இயலாத நிலையில் இருந்தது.

மேற்படி உயர்நீதிமன்ற வழக்குகளில் கடந்த 13.11.09 அன்று இறுதி உத்திரவுவழங்கப்பட்டுள்ளது. அதன்படி கடை எண்.77-ஐ திரு.சென்னகேசவலு நாயுடு என்பவருக்கும் கடை எண்.72-ஐ திரு.ராஜு நாயுடு என்பவருக்கும் மற்றும் கடை எண்.74-ஐ திரு.S.M.அப்துல் கரீம் என்பவருக்கும் ஒதுக்கீடு செய்யுமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்படி PVR பாலன் மற்றும் தங்கமணி ஆகியோர் மேற்படி உயர்நீதிமன்ற உத்திரவுகளின்படி கடைகளை தங்களுக்கு ஒதுக்கீடு செய்யுமாறு 07.12.09-ந் தேதிய கடிதங்களின் மூலம் கோரியுள்ளனர். இதுபோலவே மீதமுள்ள வியாபாரிகளில் (உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடராதவர்கள்) திரு.SMS. அப்துல் கரீம் திரு.ராஜுநாயுடு திரு.சென்னைகேசவலு நாயுடு ஆகியோர்கள் தங்களது 07.12.09-ந் தேதிய கடிதங்களில் மேற்படி வழக்குகள் தொடர்ந்த PVR பாலன் மற்றும் தங்கமணி ஆகியோர்களுக்கு எந்த காரணத்திற்காக கடை ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்ததோ அதே காரணத்திற்காக தான் தங்களுக்கும் கடைகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும் தற்போது மேற்படி PVR பாலன் மற்றும் தங்கமணி ஆகியோர்களுக்கு உயர்நீதிமன்றம் அளித்த உத்திரவின் அடிப்படையிலேயே தங்களுக்கும் ஏற்கனவே மாநகராட்சி தீர்மானங்களின்படி பரிந்துரைக்கப்பட்ட கடைகளை ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளனர்.

இது தொடர்பாக பெறப்பட்டுள்ள மாநகராட்சி உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஆர்.சிவக்குமார் அவர்களது கருத்துரை தேதி 21.11.2009-ல் மேற்படி கடைகள் பல ஆண்டுகளாக வழக்குகளின் காரணமாக காலியாக வைக்கப்பட்டுள்ளதால், மேற்படி உயர்நீதிமன்ற உத்திரவுகளின்படி மேற்படி கடை எண்.61-ஐ திரு. PVR பாலன் என்பவருக்கும், கடை எண். 76-ஐ திரு.தங்கமணி என்பவருக்கும் ஒதுக்கீடு செய்யலாம் எனவும், மேலும் வழக்குகள் தற்போது முடிவுற்றுவிட்டதால் எஞ்சிய 7 கடைகளை பொது ஏலத்திற்கு கொண்டு வரலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

மற்றும் மேற்படி மார்க்கெட்டில் உள்ள கடை எண்.61 மற்றும் 76-க்கு அருகிலுள்ள மற்ற 16 கடைகளுக்கும் கடை ஒதுக்கி வழங்கப்பட்ட நாள் முதல் கடை வாடகை ஒவ்வொரு மூன்றாண்டு காலத்திற்கும் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டு வந்ததில் கடைசியாக மாநகர மன்றத் தீர்மானம் எண் 239 நாள் 29.09.08-ல் 01.04.2007 முதல் 31.03.2010 முடிய மூன்றாண்டுகளுக்கு உரிமம் புதுப்பித்து 15 சதவீதம் வாடகை உயர்வு செய்ததில் மாதாந்திர உரிமம் கட்டணம் ரூ.1335- ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கடை எண்.61 மற்றும் 76-ஐ மாதாந்திர உரிமம் கட்டணம் ரூ.1335- ஆக நிர்ணயம் செய்தும், ஒரு வருட வாடகை முன்பணமாக (1335x12=16020-) ரூ.16020-ஐ வசூலிக்கவும், மாநகர மன்ற தீர்மான எண்.163 நாள்.29.12.2009-ல் மேற்படி பொருள் தொடர்பாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

தற்சமயம் உயர்நீதி மன்ற தீர்ப்பு எண்.W.P.Nos.26175 to 26177 of 2009 and M.P.Nos.1, 1 & of 2009 நாள்.23.12.2009-ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரையில் ஏற்கனவே கடை ஒதுக்கீடு பெற்ற திரு.P.V.R.பாலன் மற்றும் திரு. தங்கமணி ஆகியோரது வழக்கிற்கு வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலேயே (1) திரு. சென்னகேசவலு நாயுடு, (2) திரு. ராஜு நாயுடு மற்றும் (3) திரு.S.M.அப்துல் கரீம் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட 7.12.2009-ம் தேதிய விண்ணப்பங்களின் மீது பரிசீலனை செய்து நான்கு வாரங்களுக்குள் பதில் அளிக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பொருள் தொடர்பாக உயர்நீதிமன்ற வழக்கறிஞரின் கருத்துரை கோரப்பட்டது. அதற்கு உயர்நீதிமன்ற வழக்கறிஞரின் 06.02.10-ம் தேதிய கருத்துரையில் உயர்நீதிமன்ற தீர்ப்பு எண். W.P.Nos.26175 to 26177 of 2009 and M.P.Nos.1, 1 & of 2009 நாள்.23.12.2009-ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரையில் ஏற்கனவே ஒதுக்கீடு பெற்ற திரு.P.V.R.பாலன் மற்றும் திரு.தங்கமணி ஆகியோர்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலேயே (1) திரு.சென்னகேசவலு நாயுடு, (2) திரு.ராஜு நாயுடு மற்றும் (3) திரு.S.M.அப்துல் கரீம் ஆகியோரால் 07.12.2009-ல் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் மீது நான்கு வாரங்களுக்குள் பதில் அளிக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது. இத்தீர்ப்புரையில் ஆணையாளர் நேரிடையாக பரிசீலனை செய்து நான்கு வாரங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும். எனவே மேற்படி மூன்று நபர்களுக்கு மட்டும் மேட்டுப்பாளையம் ரோடு கடை எண்.77, 72, 74 ஆகிய மூன்று கடைகளை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக பரிசீலித்து மேற்படி கடைகளை ஒதுக்கீடு வழங்கலாம் என கருத்துரை தெரிவித்துள்ளார்.

ஆகவே, மேற்படி மூன்று கடைகளை (1) திரு.சென்னகேசவலு நாயுடு, (2) திரு.ராஜு நாயுடு மற்றும் (3) திரு.S.M.அப்துல் கரீம் ஆகியோர்களுக்கு ஒதுக்கீடு வழங்க ஆணையரிடம் 13.02.2010-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர் மார்க்கெட் கடை எண்.77-ஐ திரு.சென்னகேசவலு நாயுடு என்பவருக்கும் கடை எண்.72-ஐ திரு.ராஜு நாயுடு என்பவருக்கும் மற்றும் கடை எண்.74-ஐ திரு.S.M.அப்துல் கரீம் என்பவருக்கும் ஒதுக்கீடு வழங்கவும், மேற்படி இரு நபர்களான திரு.P.V.Rபாலன் மற்றும் திரு.தங்கமணி ஆகியோர்களுக்கு ஏற்கனவே மாதாந்திர வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது போலவே இந்நபர்களுக்கும் கடை ஒன்றிற்கு மாதாந்திர உரிமம் கட்டணம் ரூ.1335- ஆக நிர்ணயம் செய்தும், ஒரு வருட வாடகை முன்பணமாக (1335x12=16020-) ரூ.16020-ஐ வசூலிக்கவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.42 நாள்.15.02.2010-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாநகர மன்ற தீர்மான எண் 240 நாள் 18.2.2010-யின் படி மேற்படி மூன்று நபர்களுக்கு கடை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

எனவே மீதமுள்ள கடை எண் 59,64,66 ஆகிய மூன்று கடைகள் முறையே திரு. அப்துல் கலாம், திரு, அப்துல் ஹக்கீம், திரு. ஏ. முகமது இலியாஸ் ஆகிய மூன்று நபா்களும் தங்களுக்கும் ஒதுக்கீடு வழங்க கோரியுள்ளனா். மற்றும் இறுதியாக வரப்பெற்ற உயா் நீதி மன்ற உத்திரவு எண் 1549/2010, 1550/2010, 1551/2010, நாள் 29.01.2010 தேதிய உத்திரவில் திரு. அப்துல் கலாம், திரு. அப்துல் ஹக்கீம், திரு. முகமது இல்யாஸ் ஆகியோா்களுக்கு ஏற்கனவே மேற்படியாா்களுக்கு கடை ஒதுக்கீடு வழங்கப்பட்டது போல் முன்னுரிமை அடிப்படையில் மேற்படி உத்திரவிடப்பட்ட நான்கு வாரங்களுக்குள் கடை ஒதுக்கீடு வழங்குவது தொடா்பாக ஆணையாளா் பரிசீலனை செய்து பதில் அளிக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட உயா் நீதிமன்ற உத்திரவின் பேரில் மேற்படி மூன்று கடைகளை முறையே கடை எண் 59,64,66 திரு. அப்துல் கலாம், திரு, அப்துல் ஹக்கீம், திரு. ஏ. முகமது இலியாஸ் ஆகிய மூன்று நபா்களுக்கு ஒதுக்கீடு வழங்க ஆணையாளா் 15.04.2010-ந் தேதியில் அனுமதி வழங்கியுள்ளாா்.

எனவே இரு நபா்களுக்கு திரு.P.V.R.பாலன் மற்றும் திரு.தங்கமணி ஆகியோா்களுக்கு ஏற்கனவே மாதாந்திர வாடகை நிா்ணயம் செய்யப்பட்டது போலவே இந்நபா்களுக்கும் கடை ஒன்றிற்கு மாதாந்திர உரிமம் கட்டணம் ரூ.1335- ஆக நிா்ணயம் செய்தும், ஒரு வருட வாடகை முன்பணமாக (1335x12=16020-) ரூ.16020-ஐ வசூலிக்கவும் மற்றும் எம்.ஜி.ஆா் மாா்க்கெட் கடை எண். 59-ஐ திரு.அப்துல் கலாம் என்பவருக்கும் கடை எண்.64-ஐ திரு.அப்துல் ஹக்கீம் என்பவருக்கும் மற்றும் கடை எண்.66-ஐ திரு. முகமது இலியாஸ் என்பவருக்கும் ஒதுக்கீடு செய்யவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மான எண் 19 நாள் 08.06.2010-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி மன்றத்தாள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.1124/2010/ அ1 (மே)

## மாநகர மன்ற தீா்மானம் எண் 71 நாள் 30.07.10

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண். 19 நாள் 08.06.2010 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பாா்வை- தணிக்கை தடை பத்தி எண் 57/2006-07

-----

பாா்வையில் கண்ட தணிக்கை தடையில் கோவை மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான சொக்கம் புதூரில் உள்ள சலவைத் துறைக்கு, தினசரி வாடகையாக ரூ.90/- என மாநகராட்சி மன்ற தீா்மான எண் 422 நாள் 29.12.1998-ன்படி தீா்மானிக்கப்பட்டு தமிழ்நாடு சலவையாளா் சங்கம் வசம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் மேற்படி மன்ற தீா்மானத்தில் குத்தகை காலவரையரை குறிப்பிடாமல் உள்ளது. எனவே மாநகராட்சியின் நலன் கருதியும், நிதி ஆதாரங்களை மேம்படுத்தவும் மேற்காண் குத்தகைக்கு காலக்கெடு நிா்ணயம் செய்வதுடன் மீளவும் பொது ஏலம் விடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ளது.

மேற்படி சொக்கம்புதூா் சலவை துறைக்கு, தினசரி வாடகை 90/- அடிப்படையில் மே 2010 முடிய நிலுவையின்றி மாதாந்திர உரிமம் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

மாநகர மன்றத் தீா்மானம் எண் 422 நாள் 29.12.1998-ல் கோவை மாநகராட்சிக்கு சொந்தமான சொக்கம்புதுா் சலவைத் துறைகளை பொது ஏலம் மூலம் ஒப்படைத்தால் தனியாா்கள் உட்புகுந்து லாபம் சம்பாதிக்கும் நோக்குடன் இருக்கும். மற்றும் சலவையாளா்களின் பிழைப்பு பாதிக்கப்படும் என்பதால் பொது ஏலத்தில் விடாமல் மேற்படி சலவைத்துறையினை ஏனைய சங்கங்களையும் தொழில் செய்ய அனுமதித்து தமிழ்நாடு சலவையாளா்கள் சங்கம் வசம் ஒப்படைக்க தீா்மானிக்கப்பட்டது. மற்றும் தற்சமயம் மேற்படி இனத்திற்கு காலக்கெடு நிா்ணயம் செய்து வாடகை உயா்வு செய்ய உரிமம் புதுப்பிக்க வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண்24 நாள் 08.06.2010-ல் தினசரி வாடகையாக ரூ. 150 நிா்ணயம் செய்யவும் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை 15% வாடகை உயா்வு செய்யவும் தமிழ்நாடு சலவையாளா்கள் சங்கத்திற்கு கால நீட்டிப்பு வழங்கவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே மாமன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண். 3861/ 10/A1/(W)

## மாநகர மன்ற தீா்மானம் எண் 72 நாள் 30.07.10

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண். 24 நாள் 08.06.2010 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

பொருள் - பணியமைப்பு - கோயம்புத்தூா் மாநகராட்சி – திருமதி. என். தனலட்சுமி, இளநிலை உதவியாளா் மற்றும் தட்டச்சா், தெற்கு மண்டலம் - சென்னை மாநகராட்சிக்கு மாறுதல் கோருதல் - தொடா்பாக.

--------

கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி என். தனலட்சுமி, தனது கணவா் சென்னையில் தனியாா் கம்பெனியில் பணியாற்றி வருவதாகவும், தான் கோவை மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருவதாகவும், தனது குழந்தைகளுடன் கோவையில் தனித்து வசித்து வருவது மிகவும் சிரமமாக உள்ளதாகவும், தான் கணவா் பணிபுரியும் சென்னைக்கு பணிமாறுதல் வேண்டி 06.03.2010ம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளாா்.

அரசு இணைச் செயலாளா், நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கு துறை அவா்களின் கடிதம் எண். 1302/மாந.4/2010-1, நாள் 21.01.2010-ல் திருமதி. என். தனலட்சமி, இளநிலை உதவியாளா் அவா்களை சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதல் செய்ய தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளாா்.

எனவே திருமதி என். தனலட்சமி, இளநிலை உதவியாளா் அவா்களை சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பரிசீலிக்கலாம். ந.க.எண். 1048/2010/எம்சி2

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 73 நாள் 30.07.10</u>

அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

கிழக்கு மண்டலம் பிரிவு எண் II வாா்டு 11-க்குட்பட்ட சிங்காநல்லூா் பேருந்துநிலையத்தில் ‘‘பேருந்து நிலையந்தோறும் புத்தகக்கடை அமைத்தல்’’ திட்டத்தின்கீழ் புத்தகக் கடை அமைக்க அனுமதி வேண்டி ‘‘விஜயா பதிப்பகம் ’’ இராஜ வீதி, புத்தகக் கடை நிறுவனா் கோரியுள்ளாா்.

மேற்படி பேருந்து நிலையத்தில் புத்தகக் கடை இல்லாமல் இருக்கின்றது. மேலும் நகா்புற உள்ளாட்சி அமைப்புகளின் பேருந்து நிலையங்களில் தமிழ்நூல்கள் விற்பனைக்கு பெட்டிக்கடைகள் ஒதுக்கீடு செய்வது குறித்து வெளியிடப்பட்ட நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் (நநி4) துறை அரசு ஆணை எண் 64 தேதி 5.5.09-ன்படி நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி பேருந்து நிலையத்தில் இரண்டாவது தளத்தில் 16’0’’x11’0’’அளவில் கடை ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 7405/10/கிசி1

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 74 நாள் 30.07.10</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

பொருள் - கோயம்புத்தூா் மாநகராட்சி அவினாசி சாலையில் 20 எண்ணிக்கையில் நவீன பயணியா் பேருந்து நிழற்குடைகள், 20 எண்ணிக்கையில் நவீன சிறுநீா் கழிப்பிடங்கள் மற்றும் 60 நடமாடும் கழிப்பறைகள் ஆகியவற்றை பராமரிக்கவும் மற்றும் அவைகளில் விளம்பரம் செய்வதற்கும் விருப்ப கேட்பு அறிக்கை கோருதல் - சம்மந்தமாக.

-------------

கோவை மாநகராட்சி மூலம் அவினாசி சாலையில் 20 எண்ணிக்கையில் நவீன பயணியா் பேருந்து நிழற்குடைகள், புதிதாக அமைக்கப்பட்டுள்ள 20 நவீன சிறுநீா் கழிப்பிடங்கள் மற்றும் 60 எண்ணிக்கை நடமாடும் கழிப்பறைகள் ஆகியவற்றை பராமரிக்க போதிய பணியாளா்கள் இல்லாத காரணத்தினால் இப்பேருந்து நிழற்குடைகள், சிறுநீா் கழிப்பிடங்கள் மற்றும் நடமாடும் கழிப்பறைகளை தனியாா் மூலம் சிறப்பாக பராமரிக்கவும் இவற்றில் மாநகராட்சி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு மூன்றாண்டுகளுக்கு விளம்பரம் செய்து கொள்ளவும் தேவைப்படின் மேலும் மூன்றாண்டுகளுக்கு அனுமதியினை நீட்டித்துக் கொள்ளவும் விருப்ப கேட்பு அறிக்கை கோர (Expression of Interest) மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 1269/10/MD4

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 75 நாள் 30.07.10</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

பொருள் - பணியமைப்பு - கோயம்புத்தூா் மாநகராட்சி – திருமதி. N.அன்னாள்மேரி, பலநோக்கு சுகாதார செவிலியா், ஜெயில் ரோடு, நகா்நல மையம் - சென்னை மாநகராட்சிக்கு திருமதி கல்பனா, பலநோக்கு சுகாதார செவிலியா் பணி இடத்திற்கு மனமொத்த மாறுதல் கோருவது – தொடா்பாக.

--------

கோயம்புத்தூா் மாநகராட்சி ஜெயில் ரோடு நகா்நல மையத்தில் பலநோக்கு சுகாதார செவிலியராகப் பணிபுரியும் திருமதி N. அன்னாள்மேரி அவா்களுக்கு சொந்தஊா் சென்னை என்பதாலும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தனக்கு சென்னை மாநகராட்சிக்கு பணிமாற்றம் செய்துதருமாறு விண்ணப்பித்துள்ளாா்.

சென்னை மாநகராட்சியில் பலநோக்கு சுகாதார செவிலியராகப் பணிபுரிந்து வரும் திருமதி கல்பனா, கோயம்புத்தூா் மாநகராட்சிக்கு மனமொத்த மாறுதலில் வர இசைவு தெரிவித்துள்ளதால் திருமதி N. அன்னாள்மேரி, பலநோக்கு சுகாதார செவிலியரை மனமொத்த மாறுதலில் சென்னைக்கு மாறுதல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப்பின் மேற்படி தீா்மானத்தை ஆணையா், சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி நிா்வாக ஆணையா், சென்னை அவா்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண். 1816/2010/எம்சி3

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 76 நாள் 30.07.10</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

கோவை மாநகராட்சி, பில்லூா் குடிநீா்த் திட்டம் பகுதி I ன் கீழ் இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பிரதான மேல்நிலை தொட்டியிலிருந்து கிழக்கு மண்டல பகுதிகளுக்கு செல்லும் பிரதான குழாய்கள் பதிக்கப்பட்டு 12 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ள நிலையில் பீளமேடு மசக்காளிபாளையம், சௌரிபாளையம், வரதராஜபுரம், நீலிக்கோணாம்பாளையம், சிங்காநல்லூா், ஒண்டிப்புதூா், SIHS காலனி மற்றும் நேதாஜிபுரம் பகுதிகள் அடங்கிய வாா்டு எண்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 பகுதி, 11 பகுதி மற்றும் வாா்டு எண் 16 பகுதிகளில் குடிநீா் வழங்க பதிக்கப்பட்டுள்ள குடிநீா் ஏ.சி. குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் 450 மற்றும் 500 மி.மீ விட்டமுள்ள ஏ.சி. குழாய்களுக்கு பதிலாக 900 முதல் 1000 மி.மீ விட்டமுள்ள M.S. / D.I. குழாய்கள் ரூ. 7.00 கோடி செலவில் சுமாா் 6 கி.மீ. நீளத்திற்கு அமைக்க மாநில அரசின் “இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை நிதி” திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய 24.07.2009ல் நகராட்சி நிா்வாக இயக்குநா், சென்னை அவா்களால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது ந.க.எண். 39618/2009/L.A.3 29.01.2010ம் தேதிய கடிதத்தில் மானிய நிதியாக ரூ. 4.44 கோடி ஒதுக்கீடு செய்தும், மாநகராட்சி பங்கு நிதியாக ரூ. 256.00 இலட்சம் செலவழித்தும் பணியினை ரூ. 700 இலட்ச செலவில் மேற்கொள்ள அனுமதி அளித்ததின் பேரில் மாமன்ற தீர்மானம் எண் 270 நாள் 12.03.2010ல் ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி கடந்த 09.04.2010ல் பிரேரனைகள் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் 2010–2011ம் ஆண்டின் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியல் படி விலை விகிதம் கணக்கிடப்பட்டும், தொழில்நுட்ப வல்லுனர் தி/ள். பிட்சனர் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்களால் தயாரிக்கப்பட்ட வடிவமைப்பின்படியும் பில்லூர் II வது குடிநீர் திட்ட இராமகிருஷ்ணாபுரம் மேல்நிலை தொட்டியிலிருந்து 1100 மி.மீ. விட்டமுள்ள பிரதான குடிநீர் குழாய் மற்றும் 700 மி.மீ. விட்டமுள்ள பிரதான குழாய் அமைக்கப்பட வேண்டுமென தெரிய வந்ததின் பேரில் கணக்கிடப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 10.50 கோடி செலவாகுமென தெரியவந்தது. எனவே MS Spirally Welded pipe / Ductile Iron pipe வடிவமைக்கப்பட்ட அளவின்படி பதிக்கப்படுவதற்கு பதிலாக பார் ரேப்ட் ஸ்டீல் சிலிண்டர் பைப் (Bar Wrapped Steel Cylinder pipe) பதிக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டதில் 6 கி.மீ. நீளத்திற்கு பதிக்க ரூ. 8.50 கோடி செலவாகுமென கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே அரசால் ''இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறை நிவர்த்தி'' செய்யும் நிதியாக விடுவிக்கப்படவுள்ள தொகை ரூ.4.44 கோடி போக மீதம் தேவைப்படும் தொகை ரூ. 4.06 கோடியினை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்தோ (அல்லது) மாநகராட்சி பொது நிதியிலிருந்தோ செலவழித்து இப்பணியினை மேற்கொள்ள மாமன்ற ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**( O & M Gap filling fund 2009 - 2010)**

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் | அரசு மானியத் தொகை ரூபாய் இலட்சத்தில் | மாநகராட்சி பங்குத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | கணபதி பிரதான மேல்நிலை தொட்டியிலிருந்து சிங்காநல்லூர் வரையிலான பிரதான குழாய் மெயின் 500 / 400 மி.மீ விட்டமுள்ள ஏ.சி. விநியோக மெயினுக்கு பதிலாக 1100/700 மி.மீ. விட்டமுள்ள பார் ரேப்ட் ஸ்டீல் சிலிண்டர் பைப் (Bar Wrapped Steel Cylinder pipe) குழாயாக மாற்றும் பணி | 850.00 | 444.00 | 406.00 |

<u>அலுவலகக்குறிப்பு :</u>

அ) மேற்கண்ட பணிக்குண்டான மொத்த மதிப்பீட்டு தொகை ரூ. 850.00 இலட்சத்தில் அரசால் இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் மானிய நிதியிலிருந்து விடுவிக்கப்படும் மானியத் தொகை ரூ. 444.00 இலட்சத்துடன் மாநகராட்சி பங்குத் தொகையான ரூ. 406.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் திட்ட தொகையிலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ செலவழித்து, இப்பணியினை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) அரசின் நிர்வாக அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

ந.க.எண். 7504/09/ஜே.என். 4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 77 நாள் 30.07.10</u>

அலுவலகக் குறிப்பு 'அ' மற்றும் 'ஆ' ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 20

கோவை மாநகராட்சி, தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

அதில் சிப்பம் (5) பணியான கட்டன் மலை குகை வெளியேற்றத்திலிருந்து ராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் தொட்டி வரை 1500 முதல் 1000 எம்.எம் வரை எம்.எஸ். (MS) மற்றும் பி.எஸ்.சி. (PSC) குழாய் அமைத்தல் பணி மெஸ்ஸர்ஸ் நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட், சென்னை என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

குடிநீர் பிரதான குழாய் பதிக்கும் பணியில் இரயில்வே இருப்புப் பாதை வீரபாண்டி பிரிவு வளைவு எண் 6 (கி.மீ 16/700–800) கோவை – மேட்டுப்பாளையம் இரயில்வே இருப்பு பாதையினை 1500 மி.மீ. விட்டமுள்ள குடிநீர் பிரதான குழாய் 58 மீட்டர் நீளத்திற்கு பதிக்க வேண்டியுள்ளதால் கோட்ட மேலாளர், தென்னக இரயில்வே, சேலம் கோட்டம் அவர்களின் அனுமதி வேண்டி கடந்த 18.03.09–ல் பிரேரனை அனுப்பப்பட்டது.

மேற்படி இடத்தை இரயில்வே துறையினர் பார்வையிட்டு இரயில்வே இருப்பு பாதை பகுதியில் பதிக்கப்படவுள்ள 1500 மி.மீ. விட்டமுள்ள குடிநீர் குழாயினை 1700 மி.மீ. விட்டமுள்ள இரும்பு மூடு குழாய் (Covering Pipe) மூலம் கொண்டு செல்லுமாறு பதித்தும், இரயில்வே இருப்பு பாதை மற்றும் இரயில்வே பகுதியில் குடிநீர் குழாய் பதிக்க கடின மண் பகுதியினை திறந்த வெளி குழி தோண்டாமல் துளையிட்டு குழாயினை உந்துதல் மூலமாக பதிக்கவும் (Trenchless Technology) வேண்டுமெனவும் மற்றும் இரயில்வே துறையால் தெரிவிக்கப்படும் நிபந்தனைகளை அடிப்படையாக கொண்டு இரயில்வே பொறியாளர்கள் மேற்பார்வையில் மாநகராட்சி பணியினை மேற்கொள்ள வேண்டுமென தென்னக இரயில்வே துறை, கோட்ட மேலாளர் கடந்த 18.05.2010–ல் தெரிவித்து அதற்கான ஒப்பந்தம் மாநகராட்சியில் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

இரயில்வே துறை தெரிவித்துள்ள இச்சிறப்பு பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 99,50,000/– ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீட்டில் உரிய வழிவகை இல்லாததால் இத்துணை மதிப்பீடு தொகையான ரூ.99,50,000/– லட்சத்தினை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவழித்து இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> இரயில்வேக்கு சொந்தமான இருப்பு பாதையின் கீழ்பகுதியில் கடின மண் பகுதியினை துளையிட்டு (Trenchless Technology முறையில்) குடைந்து பில்லூர் இரண்டாவது குடிநீர் பிரதான குழாயினை உந்துதல் மூலமாக (Pushing) பதிக்கவும் மற்றும் இரயில்வே துறையின் மேற்பார்வையில் இப்பணியினை மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பீட்டு தொகையான ரூ. 99.50 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி இச்செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் திட்டநிதியிலிருந்து செலவழிக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 5260/10/ஜே.என். 5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 78 நாள் 30.07.10</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 21

கோவை மாநகராட்சி, தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

அதில் சிப்பம் (5) பணியான கட்டன் மலை குகை வெளியேற்றத்திலிருந்து ராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் தொட்டி வரை 1500 முதல் 1000 எம்.எம் வரை எம்.எஸ். (MS) மற்றும் பி.எஸ்.சி. (PSC) குழாய் அமைத்தல் பணி மெஸ்ஸர்ஸ் நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட், சென்னை என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

குடிநீர் பிரதான குழாய் பதிக்கும் பணியில் வீரபாண்டிபிரிவு இரயில்வே இருப்புப் பாதை வீரபாண்டி பிரிவு வளைவு எண் 6 (கி.மீ 16/700–800) கோவை – மேட்டுப்பாளையம் இரயில்வே இருப்பு பாதையினை 1500 மிமீ விட்டமுள்ள குடிநீர் பிரதான குழாய் 58 மீட்டர் நீளத்திற்கு பதிக்க கோட்ட மேலாளர், தென்னக இரயில்வே, சேலம் கோட்டம் அவர்களின் உரிய அனுமதி வேண்டி கடந்த 18.03.09–ல் பிரேரனை அனுப்பப்பட்டது.

மேற்படி இடத்தை இரயில்வே துறையினர் பார்வையிட்டு 1500 மிமீ விட்டமுள்ள குடிநீர் குழாயினை 1700 மி.மீ. விட்டமுள்ள இரும்பு மூடு (Covering pipe) குழாய் மூலம் கொண்டு செல்லுமாறு பதித்தும் 1500 மிமீ விட்டமுள்ள குடிநீர் மெயின் குழாயில் இரயில்வே பகுதியினை ஒட்டி இருபுறங்களிலும் இரு சுலிஸ் வால்வுகள் (Sluice Valves) பொருத்த வேண்டுமென இரயில்வே துறையால் நிபந்தனைகள் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் இச்சிப்பப் பகுதியில் வரும் கட்டன்மலை அடிவாரத்திலிருந்து இராமகிருஷ்ணாபுரம் வரை அமைக்கப்படவுள்ள பிரதான குடிநீர் குழாயில் 14 எண்ணிக்கை கொண்ட 200 மிமீ விட்டமுள்ள காற்றழுத்தம் விடுவிக்க தேவையான ஏர்வால்வுகள் (Air valves) பொருத்த வழிவகை செய்யப்படவில்லை. பணிகள் மேற்கொள்ளப்படும் சமயத்தில் பில்லூர் I பகுதியில் பொருத்தப்பட்டுள்ள ஏர்வால்வுகளுக்கு இணையாக மேற்கண்ட வால்வுகளை பொருத்தப்படல் வேண்டுமென கண்டறியப்பட்டது.

இக்கூடுதல் ஏர்வால்வுகள் மற்றும் இரு சுவிஸ் வால்வுகள் பொருத்த ஆகும் செலவினத்திற்கு மதிப்பீட்டில் உரிய நிதி இல்லாததால் துணை மதிப்பீடு தயாரித்து இப்பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ. 33,80,000/– லட்சத்தினை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> மாமன்றம் நிர்வாக அனுமதி வழங்கி இச்செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 4614/08/ஜே.என்.5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 79 நாள் 30.07.10</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 22

கோவை மாநகராட்சி, தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

அதில் சிப்பம் (5) பணியான கட்டன் மலை குகை வெளியேற்றத்திலிருந்து ராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் தொட்டி வரை 1500 முதல் 1000 எம்.எம் வரை எம்.எஸ். (MS) மற்றும் பி.எஸ்.சி. (PSC) குழாய் அமைத்தல் பணி மெஸ்ஸர்ஸ் நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட், சென்னை என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

குடிநீர் பிரதான குழாய் பதிக்கும் பணியில் சத்தியமங்கலம் – மைசூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலைத்துறைக்கு (NH 209) சொந்தமான சாலையில் கீரணத்தம் ஊராட்சி பகுதியில் 25 மீட்டர் நீளத்திற்கு சாலையினை கடந்து குழாய் பதிக்க வேண்டியுள்ளதால் முதன்மை பொறியாளர், சென்னை (NH) அவர்களுக்கு சிறப்பு முதன்மை பொறியாளர், சேலம் அவர்களின் மூலமாக கடந்த 13.05.2010–ல் பிரேரனை அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தை நெடுஞ்சாலைத்துறையினர் பார்வையிட்டு குடிநீர் குழாய் பதிக்க மண் பகுதியினை திறந்த வெளி குழி தோண்டாமல் துளையிட்ட குழாயினை உந்துதல் மூலமாக (Trenchless Technology) 1500மி.மீ. விட்டமுள்ள குழாய் பதிக்க வேண்டுமென நிபந்தனையுடன் தேசிய நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர், புதுடெல்லி அவர்களுக்கு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்கள் வரைவு தொகுப்பு 03.06.2010 அன்று அனுப்பியுள்ளார். நெடுஞ்சாலைத்துறை தெரிவித்துள்ள இப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 58,00,000/– ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீட்டில் உரிய வழிவகை இல்லாததால் இத்துணை மதிப்பீடு தொகையான ரூ. 58,00,000/– லட்சத்தினை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவழித்து இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலையில் கடின மண் பகுதியினை துளையிட்டு (Trenchless Technology முறையில்) குடைந்து பில்லூர் இரண்டாவது குடிநீர் பிரதான குழாயினை உந்துதல் மூலமாக (Pushing) பதிக்கவும் மற்றும் நெடுஞ்சாலைத் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையின்படி இப்பணியினை மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பீட்டு தொகையான ரூ. 58.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி இச்செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் திட்டநிதியிலிருந்து செலவழிக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 4614/08/ஜே.என்.5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 80 நாள் 30.07.10</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலம் உக்கடம் பேருந்து நிலையத்தில் பெட்டிகடை அமைத்து வியாபாரம் செய்து கொள்ள அனுமதி வழங்குமாறு கே.முகமது சலீம் (உடல் ஊனமுற்றோா்) என்பவா் தொடா்ந்து மாநகராட்சியில் விண்ணப்பம் அளித்து வந்துள்ளாா். உக்கடம் பேருந்து நிலையத்தில் பெட்டி கடைகள் வைப்பதனால் பொது மக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக இருக்கும் என்பதால் மேற்படியாருக்கு பெட்டி கடை வைக்க அனுமதி மறுக்கப்பட்டது.

இந்நிலையில் மனுதாரா் வணக்கத்திற்குரிய மேயா் மற்றும் ஆணையாளா் அவா்களது மக்கள் குறை தீா்க்கும் முகாமில் பல முறை விண்ணப்பம் அளித்துள்ளதை தொடாந்து, மனுதாரருக்கு உதவும் பொருட்டு ஆவின் பாலகம் மூலம் பெட்டி அமைத்து ஆவின் நிறுவன பொருட்களை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்குமாறு ஆவின் நிா்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் ஆவின் நிா்வாக பொது மேலாளா் தனது 25.03.2010ம் தேதிய கடிதத்தில், மனுதாரா் உடல் ஊனமுற்ற நபராக இருப்பதை கருத்தில் கொண்டு இவருக்கு ஆவின் பாலக பெட்டி அமைத்து ஆவின் நிறுவன பொருட்களை விற்பனை செய்து கொள்வதற்கு அனுமதி வழங்குவதில் தங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்துள்ளாா்.

எனவே, திரு.கே.முகமது சலீம் என்பவருக்கு உக்கடம் பேருந்து நிலையத்தினுள் ஆவின் பாலக பெட்டி அமைத்து ஆவின் பொருட்களை மட்டும் விற்பனை செய்து கொள்வதற்கு மாத வாடகை ரூ.3584/- அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.1548/ 2010/அ1

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 81 நாள் 30.07.10</u>

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 24

பொருள் - கோயம்புத்தூா் மாநகராட்சி – நகா்புர ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் (BSUP) மேற்கொள்ளுதல் - பாதாள சாக்கடை மற்றும் குடிநீா் வீட்டிணைப்புகள் வழங்குதல் - பயனாளிகளிடமிருந்து வைப்புத் தொகை வசூலிக்கப்படுவதிலிருந்து விலக்களித்தல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடா்பு

-----------

கோயம்புத்தூா் மாநகராட்சி நகா்புர ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் (BSUP) திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடை குழாய்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் உள்ள வீடுகளுக்கு பாதாள சாக்கடை மற்றும் குடிநீா் இணைப்பு வழங்கப்படும்பொழுது பயனாளிகளிடமிருந்து மாநகராட்சியால் வசூலிக்கப்படும் வீட்டிணைப்பிற்கான (குடிநீா் மற்றும் பாதாள சாக்கடை) வைப்புத் தொகையை விலக்களிக்கவும் மேலும் பாதாள சாக்கடை துணை விதிகள் மற்றும் குடிநீா் விநியோக துணை விதிகளில் சோ்க்கவும் மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 12069/2006/ப.வ.(எம்)

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 82 நாள் 30.07.10</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி